தேவனுடைய மகிமை

# திருமதி.எஸ்.சரோஜினி பாயின்

## வாழ்ககை வரலாறு

புதிய எருசலேம் சபை, நாகர்கோவில், கிளையின் பாஸ்டர் எஸ்சுந்தர்ராஜ் அவர்களின் துணைவியார்

1945–ம் வருடம் டிசம்பர் மாதம் 25–ம் நாளில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கருங்கல் என்ற ஊருக்கு அருகே கருக்குப் பணை என்ற கிராத்தில், சுப்பிரமணியம் மீனாட்சி என்ற பெற்றேருக்கு பிள்ளையாக பிறந்தவள் சரோஜினி பாய் இவருக்கு கஸ்தூரிப்பாய், இரவீந்திரநாத் என்ற பெயர்களையுடைய ஒரு சகோதரியும், ஒரு சகோதரனும் உண்டு. இவளுடைய தகப்பானர் இளமையில் ஸ்ரீலங்காவில் தேயிலை தோட்டத்தில் மேஸ்திரியாக வேலை பார்த்து சம்பாதித்தவர். இவர் இளமையில் இந்திய சுகந்திரப் போராட்டத்தில் ஈடுப்பட்டுள்ளவராகையால் தன்னுடைய பிள்ளைகளுக்கு சுகந்திரப் போராட்டத்தில் தியாகிகளுடைய பெயர்களை வைத்துள்ளார். இவர்கள் திருச்செந்தூர் முருகனை வணங்கி வந்தனர்.

இந்தக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்து சரோஜினி பாய்க்கு சின் வயதிலேயே ஏழைகளுக்கு இரங்க வேண்டும் என்ற ஒரு சுபாவத்தை தேவன் இவளுக்கு கொடுத்துள்ளார். அக்கம் பக்கத்திலுள்ள ஏழைகள் இவளடைய அம்மா இல்லாத வேளையில் வந்து சரோஜினி எங்கள் வீட்டிலே மென்றும் இல்லை பிள்ளைகள் பட்டினியாய் இருக்கிறார்கள். கணவன் குடித்துவிட்டு வேலைக்கு போவதில்லை என்று கூறினால், ஒரு பெரிய ஓலைப் பெட்டியை எடுத்து அதில் அசிரிசி, தேங்காய், மாங்காய் போன்ற பொருட்களை போட்டுக் கொடுப்பதுண்டு, தாயார் எப்பொழுதாவது ஓலைப் பெட்டியை காணவில்லையே என்று தேடும்பொழுது. “அந்த வீட்டு அக்கா, பிள்ளைகள் பட்டினியாய் இருக்கிறார்கள் என்று கேட்டார்கள் அதனாலே கொஞ்சம்த பொருட்கள் கொடுத்தேன் என்று கூறுவாளாம் சரி பாரவாயில்லை ஏழைகளுக்கு இரங்குவது நல்லது என்று தாயாரும் கூறுவார்களாம். சரோஜினி ஆறாவது வகுப்பு படிப்புக்காக கொஞ்சம் துரத்திலுள்ள

பள்ளிக்கு படிக்கச் சென்று பொழுது வழியில் யாராவது பிச்சைச் காரரைக் கண்டால். தன்னுடைய டிபன் பாக்சில் இருக்கும் சாதத்தை அந்த பிச்சைச் காரனுக்கு கொடுத்துவிட்டு, எல்லா பிள்ளைகளோடு தன்னுரைடய வெறும் பாத்திரத்தை வைத்து விடுவாளாம். ஒரு நாள் ஒரு மாணவி சரோஜினியினுடைய பாத்திரத்தை தூக்கி பார்த்து விட்டு அதனுள்ளே ஒன்றமில்லாமல் இருக்கிறதை கண்டு மற்ற மாணவிகளிடம் கூறியிருக்கிறது சரோஜினி சாப்பாடு கொண்டுவராமல் வெறும் பாத்திரத்தை தான் கொண்டு வருகிறாள் என்று கூறினாள். அன்று முதல் வழியில் ஏழைகளுக்கு சாப்பாட்டைக் கொடுத்து விட்டால் பாத்திரரம் நிரம்ப தண்ணீர் அடைத்து வைத்து விடுவாளாம். இப்படி சின்ன வயதியேலே ஏழைகளுக்கு இரங்க வேண்டும் என்ற ஆசை சரோஜினிக்கு உண்டாகிவிட்டது. சரோஜினி 10–ம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும்பொழுது கடவுள் யார் என்று அறிய வேண்டும் என்ற ஆசை அவள் உள்ளத்தில் உருவாகியது அவளுடைய வீட்டிற்கு முன்பாக ஒரு திண்ணை கட்டி அதில் ஒரு கல்லை நாட்டி அதற்கு மாலையிட்டு அவளுடைய அப்பா பூசை செய்து வந்திருக்கிறார்கள். அந்த கல் எப்படி கடவுளாக முடியும்? இந்தக் கல் நம்மோடு பேசுவதில்லையே. இது வைத்த இடத்திலேயே இருக்கிறதே என்று தகன்குள்ளே பேசிக்கொண்டு வீட்டில் அப்பா இல்லா நேரத்தில் அந்த கல்லை பிடுங்கி வேறு இடத்தில் போட்டுவிட்டாள். மறுநாள் தகப்பானர் வந்து நீ எப்படி அந்த சிலையை பிடுங்கினாய் நாங்கள் அதை குலதெய்வமாக வணங்கினேமே என்று போமாக கூறினாராம் தாயார் மிகவும் அழுதிருக்கிறர்கள் நீ ஏன் இப்படிச் செய்தாய் அந்தச் சாமி நம்மை ஏதாவது செய்துவிடுமே என்று, அதெல்லாம் எனக்கு ஒன்றும் செய்யாது அது வெறும் கல்தானே என்று தாயாரிடம் கூறியிருக்கிறாள் விஷயம் தெரிந்த பக்கத்துவீட்டுக் காரர்கள் வந்து இவளை ரொம்ப திட்டியிருக்கிறார்கள். இதனால் மனவருத்தமடைந்து அன்று இரவு சாப்பிடாமல் தூங்கிவிட்டாள். தூங்கி கொண்டிருக்கும் பொழுது அசரீரியாக, ‘சரோஜினி நீ பலபடுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன். என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன்'' என்று யாரோ சொல்வது போன்ற ஒரு சத்தத்தை கேட்டு ஆறுதலடைந்திருக்கிறாள்.

மறு நாள் ஞாயிற்றுக் கிழமை காலையில் அருகாமையிலுள்ள ஒரு பெற்கோஸ்தே சபைக்கு போக வேண்டும் என்ற ஆசை உண்டானது வீட்டார் முழுவதும் இந்துவாக இருப்பதால் அனுமதி பெற்று செல்வது அரிது தோழி ஒருத்தியை பார்க்க போகிறேன் என்று கூறி காலை ஆராதனைக்குச் சென்றுவிட்டாள். அங்கே பாட்டு முடிந்து பிரசங்க நேரம் வந்ததும், பிரசங்கியானவர் ஏசா.41–ம் அதிகாரம் 10–ம் வசனத்தே யாராவது வாசிக்கலாம் என்று கூறினபொழுது ஒரு ஊழியக்கார அம்மா, ‘‘நீ பயப்படாதே நான் உன்னுடனே இருக்கிறேன். திகையாதே. நான் என் தேவன், நான் உன்னை பலபடுத்தி, உனக்குச் சகயாம் பண்ணுவேன். என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்கவேன்’’ என்று வாசித்திருக்கிறார்கள். இவளுக்கு ரொம் சந்தோஷம் இதே வார்தை தான் நேற்று இரவு என்னோடு பேசினது. என்ன ஆச்சிரியம் என்று மிகுந்த மகிழ்ச்சியோடு காணப்பட்டிருக்கிறாள்.

**தேவனுக்கு மகிமை**

திருமதி. சரோஜினி பாயின் வாழ்க்கை வரலாறு

புதிய எருசலேம் சபை, நாகர்கோவில் கிளையின் பாஸ்டர் எஸ். சுந்தர்ராஜ் அவர்களின் துணைவியார்

(தொடர்ச்சி)

ஆராதனை முடிந்ததும், அந்த வசனம் வாசித்த ஊழியக்கார அக்காவிடம் சென்று அக்கா நேற்று இரவு எனக்கு அசரீரியாக யாரோ பேசுவது போல் நீங்கள் வாசித்த வசனம் கேட்டது. அதனுடைய அர்த்தம் எனக்கு தெரியவில்லை என்று அக்காளிம் கூறினாள். சரோஜினி உன்னோடு கடவுள் இயேசுகிறிஸ்து பேசியிருக்கிறார். கவலைப்படாதே! நான் உனக்கு ஒரு வேத புத்தகம் தருகிறேன் அதை வாசித்துக் கொண்டே இரு கர்த்தர் உன்னை கைவிடமாட்டார் என்று கூறினார்கள். ஞாயிறு ஆராதனை முடிந்து வேதபுத்தகத்தோடு வீட்டிற்கு வந்த சரோஜினிக் வீட்டிலே எதிர்ப்பு உருவாகிவிட்டது தகப்பனார் கோப வெறியோட எங்கள் தெய்வம் ஆகாதென்று கூறி நாங்கள் விரும்பாத தெய்வத்தை நீ

ஏற்றுக்கொண்டாயா நீ என்னுடைய வீட்டுக்குள் பிரவேசிக்க கூடாது, போ வெளியே என்று கூறி கையிலிருந்த வேத புத்தகத்தை, பிடுங்கி தூரே எறிந்து விட்டார்கள். தூர விழுந்த வேத புத்தகத்தை, எடுத்து துடைத்து கரத்தில் வைத்துக் கொண்டு வீட்டுக்கு வெளியே வராந்தாவில் உட்கார்ந்து இரவில் அங்கேயே தங்கிவிட்டாள் பெற்றோர்களும் மகளுக்கு மத்தியானமும இரவிலும் சாப்பாடு கொடுக்கவில்லை நம்முடைய குடும்ப கௌரவத்தை கெடுத்துப்போட்டாளே நாளைக்கு நகைகளை கழற்றி கொண்டு வெள்ளைச் சீலையை கட்டிக்கொண்டு நம்மை கேவலப்படுத்திப்போடுவாளே! இன்றைக்கு சாப்பாடு கொடுக்காவிட்டால் நாளைக்கு திருந்திவிடுவாள் என்று எண்ணினார்கள் ஆனால் சரோஜினியோ தன்னோடு பேசின இயசேுவுக்குாக உணவை வெறக்க ஆரம்பித்து விட்டாள். அன்றிரவும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் உளி அவளைச் சுற்றிலும் பிரகாசித்திருப்பதையும் மீண்டும் ஏசா. 41–ம் அதிகாரம் 10–ம் வசனத்தைக் கொண்டு ஆண்டவர் தன்னோடு பேசுகிற சத்தத்தையும் கேட்டு இரவு வேளை சீக்கிரமாய் கழிந்து போனது போல் காணப்பட்டதாம். காலையில்தான் செய்தது தவறு என்று எண்ணி மன்னிப்பு கேட்பாள் என்று பெற்றோர்கள் எதிர் பார்த்தார்கள் மாறாக அதிகாலையில் மகிழ்ச்சியோடு வேத புத்தகத்தை திறந்து 41–ம் அதிகாரத்தை திரும்ப திரும்ப படித்துக்கொண்டே இருந்தாள். பள்ளிக்கு புறப்படும் வேளை வந்ததும் தன்னுடைய தோழிகளுக்கெல்லாம் தன்னுடைய அனுபவங்களைச் சொல்ல வேண்டும் என்ற மகிழ்ச்சியில் புறப்பட்டாள். இவளை இனி மாற்ற முடியாது என்பதை அறிந்து, பெற்றோர்களும் அமைதியாகிவிட்டனர். இவள் தொடர்ந்து அருகிலுள்ள கிருபாசனம் என்ற ஒரு ஆவிக்குரிய சபைக்குப் போய் பரிசுத்தாவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டாள் தன்னுடைய வீட்டார் இன்னும் இரட்சிக்கப்பட வில்லையே என்ற பாரம் உள்ளத்தில் உருவானதும், பெற்றோர்களுக்காக, வீட்டிலே ஜெபிக்க ஆரம்பித்தாள் வீட்டிலே ஜெபிக்க அனுமதி இல்லை வீட்டைச் சுற்றிலும மரச்சீனி கிழங்க தோட்டம் உண்டு அந்த தோட்டத்துக்குள் சென்று, ஆண்டவரே எங்கள் வீட்டிலுள்ளவர்களின் ஆடம்பரங்களையும், ஐசுவரித்தையும் நீர் குறைக்க வேண்டும் அப்படிச் செய்தால் இவர்கள் ஒருவேளை உம்மைத் தேடுவார்கள் என்று சொல்லி சில மாதங்கள் ஜெபித்திருக்கிறாள். இவளடைய தகப்பனாருக்கு முகவாத ஜன்னி என்ற ஒரு வியாதி சரியாக சுகம் ஆகவில்லை. இந்நிலையில் தன்னுடைய ஆபரணங்களெல்லாம் கழற்றி செலவு செய்த பின்னும் கணவருக்கு இன்னும் சுகம் கிடைக்கவில்லையே என்று தாயாரின் உள்ளமானது இயேசுகிறிஸ்துவைத் தேட ஆரம்பித்தது. மகளுடன் ஜெப

வீட்டிற்கும் போனார்கள் அவர்களும் சீக்கிரமாய் ஞானஸ்நானம் பெற்று பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும் பெற்றுக் கொண்டார்கள். அதோடு அந்த சபையில் ஓர் ஊழியக் காரியாகவும் மாறிவிட்டார்கள். வியாதி சுகம் ஆகவில்லை. இந்நிலையில் சரோஜினி 10 வது வகுப்பு வரை தான் படிக்கவும் முடிந்தது 1964ம் ஆண்டு எனக்கு சரோஜினியைத் திருமணம் செய்து கொடுக்க சம்மதித்தனர். நான் மும்பையில் வேலைசெய்து கொண்டிருந்தேன். நான் அப்போது ஒரு நாஸ்திகனாய் இருந்தேன் என் தகப்பனார் போய் திருமணத்திற்கான பேச்சு வார்த்தைகளை முடித்துவிட்டு என்னை நாஸ்திகனாய் இருந்தபடியால் கிறிஸ்துவ ஆலயத்தில் போய் திருமணம் நடத்தக் கூடாது என்ற தீர்மானத்தோடு ஊருக்குச் சென்றிருந்தேன். என்னுடைய விருப்பத்தின் படி கருங்கல் sub-register office-ல் வைத்து எங்கள் திருமணம் நடந்தது.

பின்பு மும்பைக்கு குடும்பமாக வந்து சேர்ந்தோம். எனது கட்சியில் எனக்கு அமோக வரவேற்புகள் கொடுத்தார்கள். அரிவாள் சுத்தியல் பொறித்த வாழ்ந்து மடல்களை அநேகர் பரிசாக கொடுத்தார்கள். இவைகளைப் பார்த்ததும் என்னை ஒரு கம்யூனிஸ்டு என்று அறிந்து கொண்டாள். நான் ஆலயத்திற்குச் செல்வதில்லை என்பதையும் தெரிந்து கொண்டு, நீங்கள்தான் ஆலயத்திற்குப் போகவில்லை என்னையாவது ஓர் ஆவிக்குரிய ஆலயத்திற்கு ஒரு தடவை அழைத்துச் செல்லுங்கள். பின்னர் நான் ஆலயத்திற்குச் செல்கின்ற பெண்களுடன் போய் வருவேன் என்ற கூறினாள். இங்கே தமிழ் சபைகள் கிடையாது. ஹிந்தியில் தான் ஆராதனை செய்வார்கள் அது எனக்கு புரியாது என்று பதில் கூறிவிட்டேன். அன்றிலிருந்து வீட்டிலேயே இருந்து இரவும் பகலும் எனக்காக ஊக்கமாக ஜெபிக்க ஆரம்பித்தாள். நான் பகல்வேலை பார்த்து விட்டு மாயையில் வீட்டிற்கு வந்து காய்கறிபோன்ற ஜாமான்களை வாங்கி கொடுத்துவிட்டு, சுமார் 15 – மைல் தொலைவிலுள்ள கட்சி அலுவலகம் சென்று விட்டு இரவு 12 மணியளவில் வீட்டிற்கு வந்து கதவை தட்டும்பொழுது, அத்தான் என்று சொல்லி கதவைத் திறப்பாள். அப்பொழுது ஹாலில் விரித்த கோரம்பாயும், திறந்த வேதாகம புத்தகத்தையும் பார்ப்பேன். ஒரு நாள் இரவு 12 மணியளவில் கதவைத் தட்டியபொழுது, கண்ணீரை துடைத்துக் கெண்டு கதவைத் திறந்தாள். கண்ணீர் விட்டு ஜெபிக்கும் அளவுக்கு நாம் எந்த கஷ்டமும் கொடுக்கவில்லையே பின்னே ஏன் கண்ணீர் சிந்தினாள் என்பதை எண்ணும் பொழுது அவள் எனக்காகத் தான் ஜெபம் பண்ணுகிறாள் என்பதை உயர்ந்து இந்தாம்மா நீ எனக்காக ஜெபம் பண்ணாதே உங்க ஆண்டவர் என்னை ஒன்றும் அசைக்க முடியாது நாங்கள்

உங்கள் ஆண்டவரையே அசைக்கிறவங்க ஆகையால், நேரத்தோடு சாப்பிட்டுவிட்டு நேரத்தோடு தூங்கிவிடு. விடிய, விடிய ஜெபம் பண்ணினால் சுகக்கேடு வரும். பின்னர் மருந்து சாப்பிடமாட்டேன் மருத்துவரிடம் வரமாட்டேன் என்று கூறக்கூடாது. என்று கூறினேன். இப்படி இரவில் சில வினாடிகளே மனைவியிடம் பேசிக்கொள்வதுண்டு. அதிகாலையில் வேலைக்குச் சென்று மாலையில் வீடு வந்ததும் பின்னர் கட்சி ஆபீசுக்கு சுமார் 15– மைல் தொலைவிலுள்ள தாரவிக்குச் சென்றுவிட்டு இரவு 12 – மணிக்குத்தான் வீடு வருவேன்.ஞாயிற்றுக்கிழமை காலையிலே அலுவலகம் விட்டு இரவு 12– மணிக்கத்தான் திரும்ப வருவேன். இப்படி ஒரு எந்திரமாக செயல்பட்டுக் கொண்டிருந்தேன். அந்த வாரத்தில் காணவில்லை நாம் சத்தம் போட்டபடியால் ஜெபத்தைக் குறைத்துக் கொண்டாள் என்று நினைத்துக் கொண்டேன். வேகமாக எனக்கு சாப்பாடு எடுத்து வைத்துவிட்டு, எனக்கு கொஞ்சம் உடம்புக்கு சரியில்லை. நீங்கள் சாப்பிட்டுவிட்டு ஒய்வு எடுத்துக் கொள்ளுங்கள் நான் இன்றைக்கு சாப்பிடவில்லை என்று கூறிவிட்டு, கட்டிலில் போய் படுத்துக் கொண்டாள். எந்த இராத்திரியானாலும் நான் சாப்பிட்ட பிறகே அவள் சாப்பிடுவாள். அப்படிப்பட்ட ஒரு குணசாலியான ஸ்திரீயாக இருந்தாள். அவள் போய் படுத்துக்கொண்டதும், பார்த்தாயா விடிய விடிய ஜெபித்தால் சுகக்கேடு வருமென்று சொன்னேன். அல்லவா, சரி, நாளைக்கு மருத்துவரிடம் போகலாம் என்று சிரித்துக்கொண்டே கூறினேன். நான் சாப்பிட்டு முடித்துவிட்டு தினசரி பத்திரிக்கை ஒன்றை படித்துக்கொண்டிருந்தேன். அப்போது அத்தான், தண்ணீர், தண்ணீர் என்று சத்தம் வந்தது. உடனே பத்திரிக்கையை தூக்கி போட்டுவிட்டு காய்ச்சல் அதிகமாக இருக்குமோ என எண்ணி வேகமாக ஸ்டவ் அடுப்பை பற்றவைத்து தண்ணீரை சிறிது சூடாக்கிக் கொண்டு போனேன். பேச்சும், மூச்சும் நின்றுவிட்டது. சரீரத்தை தூக்கிப்பார்த்தேன், கூப்பிட்டு பார்த்தேன் பதில் இல்லை, பக்கத்து வீட்டில் என்னோடு வேலை பார்க்கும் நண்பர் ஒருவருண்டு அவருடைய துணைவி சரோஜினிக்கு மிகவும் உதவியாக இருந்தார்கள். நான் கட்சி ஆபிசிலிருந்து வர நேரமாகிவிட்டால் அந்த சகோதரி சரோஜினிக்கு துணையாக இரவில் கூட வீட்டில் வந்து பேசிக்கொண்டிருப்பார்கள். சம்பவத்தன்று அந்த வீட்டாரையும் கூப்பிட்டேன். அவர்களும் அன்று முன்னமே தூங்கிவிட்டார்கள். இனி என்ன செய்தென்று ஒரு சேரில் உட்கார்ந்து சிந்திக்க ஆரம்பித்தேன். என்னுடைய உள் மனம் அழுது கொண்டிருக்கிறது. வெளியே நான் அடிக்கிக்கொண்டேன். ஏனென்றால் இரவில் 12– மணியளவில் என்னோடு பேசிக்கொண்டிருந்தாள். அதுபோல மாலையில் பக்கத்து

வீட்டாரிடமெல்லாம் பேசியிருப்பாள். இப்போபது நடு இராத்திரியில் இறந்து போனாள் என்ற செய்தியை பக்கத்துவீட்டு இராஜஸ்தானியர், மராட்டியர்கள் கேட்டால் நான் தான் அவளைக் கொன்றுவிட்டேன் என்று எண்ணுவார்களே! என்ற பயம் என்னை ஆட்கொண்டது. காரணம் திருமணமாகி பம்பாய் வந்து 6–மாதங்கள் ஆகிறது. ஒரு நாளும் நான் வீட்டில் இருந்ததில்லை. விடுமுறை நாட்களிலும கட்சி அலுவலகத்திற்கே சென்றுவிடுவேன். ஒரு நாள் கூட பம்பாயை சுற்றிக் காட்டவில்லை. இவைகளையெல்லாம் நினைத்ததோடு, இந்த பாடியை எங்கே கொண்டுபோய் அடக்கம் செய்வது ? என்கிற கவலையும் என்னை ஆட்கொண்டது. எப்படியும் காலையில் கட்சிக்காரர்களுக்குச் சொன்னால் ஆவண செய்வார்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கும் பொழுது, என் உள்ளத்துக்குள் ஒரு சப்தம் கேட்டது, மரித்துப்போன லாசருவை தேவன் நான்கு நாட்களுக்கு பின்பு உயிரோடே எழுப்பினாரே என்கிற சத்தமே அது, அந்த சத்தத்திற்கு என்னுள் மரிக்கிறார்களே யாரும் அவர்களை உயிரோடே இன்றைக்கு எத்தனையோ லாசருக்கள் மரிக்கிறார்களே யாரும் அவர்களை உயிரோடே எழுப்பவில்லையே இதெல்லாம் வெள்ளைக்காரர்கள் கிறிஸ்துவ மதத்தைப் பரப்புவதற்காக எழுதிவைத்திருக்கிறார்கள் என்று பதில் கூறுகிறது. அடுத்து சில வினாடிகள் கழித்து மீண்டும் அதுபோலவே லாசருவை நான்கு நாளைக்குப் பின் தேவன் எழுப்பினாரென்று அதற்கும் முன் போலவே என் ஆத்துமா பதில் சொன்னது. பின்பு மூன்றாவது முறையாக என் மனதுக்குள் கேட்ட அதே சத்தம் என் வாயிலிருந்து மரித்துப்போன லாசருவை தேவன் நான்கு நாட்கள் கழித்து உயிரோடே எழுப்பினாரே என்று கூறினது. இப்படி சப்தம் வெளிப்படவும் சேரில் உட்கார்ந்திருந்த நான் அந்த சேரோடு கீழே விழுந்தேன் விபரம் அறிந்த நாளிலிருந்து நான் செய்து வந்த தவறுகளெல்லாம் என் கண்முன் ரீலாக கடந்து போய் கொண்டருந்த ஒரு சம்பவம் தோன்றிய பொழுது நான் மிகவும் மனங்கசந்து அழுதேன். ஆண்டவரே, இந்த ஒரு முறையும் என்னை மன்னித்து என் மனைவிக்கு உயிர்கொடுங்கள். நான் இனி, அரசியலுக்குப் போகமாட்டேன் என்று முறையிட்டு மனைவி படுத்திருந்த கட்டிலின் அருகே முழங்காலிட்டு ஜெபம் பண்ணினேன். பக்கத்து வீட்டில் ராஜஸ்தானைச் சேர்ந்த ஒரு குடும்பம் உண்டு. அந்த வீட்டம்மா சரோஜினியை ஒரு குழந்தையைப் போல் நேசித்தார்கள். அதிகாலை ஐந்து மணிக்கெல்லாம் எழுந்து விடுவார்கள். வீட்டிற்குள் இருந்துகொண்டே சரோஜனா சரோஜனா என்று கூப்பிடுவார்கள். இவளும் கதவை திறந்து கொண்டு என்ன மாமி என்று கூறிக்கொண்டு வெளியே வருவாள்.

ஒரு நாள் ராஜஸ்தானி அம்மாள் சரோஜினா என்று கூப்பிடும் பொழுது, பக்கத்து வீட்டிலிருந்து தமிழ் சகாதரி என்ன மாமி தினமும் சரோஜினியைத் தான் கூப்பிடுகிறீர்கள் என்ன காரணம் என்று கேட்டுக் கொண்டே அவர்களுக்கு முன்னாக வந்திருக்கிறது.

இல்லை ஒன்றுமில்லை சும்மாதான் சரோஜினாவைப் கூப்பிட்டேன் என்று கூறிவிட்டு வீட்டினுள் போய்விட்டார்கள். மறுநாள் சரோஜினாவை அழைத்து நேற்று அதிகாலையில் உன்னை கூப்பிட்டேன். நீ வரவில்லை அந்த பக்கத்து வீட்டு பெண் பிள்ளை காலையில் என்னைப் பார்த்தது. நானும் அவளது முகத்தைப் பார்த்துவிட்டேன். அன்று முழுவதும் என் வீட்டிலே சமாதானம் இல்லை. உன்னை நான் தினமும் அதிகாலையில் தேடுவது எதற்காக தெரியுமா ? உன் முகத்தை அதிகாலையில் பார்த்துவிட்டால் அன்று முழுவதும் என் வீட்டில் சமாதானம் இருக்கும் என்று கூறியிருக்கிறீர்கள். இப்பொழுது நேரம் விடியப் போகிது. அதிகாலை ஐந்து மணி தாண்டிவிட்டால், பக்கத்து வீட்டு அம்மா கூப்பிடுமேன், விஷயம் யாவருக்கும் தெரிந்து விடுமே என்று கண்ணீரோடு ஜெபித்தேன் அதிகாலை மணி ஐந்து ஆனதும் சரோஜினி படுக்கையிலிருந்து எழுந்தது போன்று எழுந்திருந்தாள். எனக்கு அடக்க முடியாத சந்தோஷமும் அழுகையும் கலந்து பலமாய் அழுவிட்டேன். ஏன் இப்படி அழுகிறீர்கள் என்று கேட்டாள். நேற்று இரவு சாப்பாடு வைத்து தந்துவிட்டு எனக்கு உடம்புக்கு சரியில்லை நீங்கள் சாப்பிட்டு விட்டு ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறினாயே, அப்படி என்ன ஆனது என்று நான் கேட்டேன். எனக்கு அப்படி ஒன்றும் ஆகவில்லை என்று கூறி மூன்று நாட்களுக்கு முன் நடந்த காரியங்களையே கூறினாள்.

எப்படியும் நான் அரசியலிருந்து விலகி விட்டேன் மறுநாளே பக்கத்திலுள்ள கிறித்வ பெண்களிடமெல்லாம் போய், எங்கள் வீட்டிலே மனந்திரும்பி விட்டார்கள். இனி நாங்கள் உங்களோடு ஆலயத்திற்கு வருவோம் எங்களையும் கூட்டிக் கொண்டு போங்கள் என்று கூறிவிட்டாள்.

அடுத்து வந்த ஞாயிற்றுக் கிழமையில் ஒரு நண்பர் ஆலயம் செல்ல அழைக்க வந்தார். எனக்கு ரொம்ப வெட்கமாகத் தோன்றியது. எப்படியும் பைபிளைகூடையில் வைத்து மனைவியிடம் கொடுத்த அவர்களுடன் அனுப்பிவிட்டு, நான் ஒரு செய்தித் தாளை கையில்

வைத்துக் கொண்டு ரொம்ப பின்னாலேயே போய்க்கொண்டிருப்பேன். பைபிளிலுள்ள ஒரு வசனத்தை விசுவாசித்து அதன்படி நடக்க வேண்டும் என்று ஜெபித்ததும் அந்த வேத வாக்கியம் நிறைவேறினது, மேலும் பைபிளிலுள்ள எல்லா வேத வாக்கியங்களையும் வாசித்து அதன் மெய்ப்பொருளை அறிந்து அதன்படியே நடக்க வேண்டும் என்று விசுவாசித்தால் அப்படியே நடக்கும் என்ற ஆவல் என் உள்ளத்தை நிரப்பினது. போய்க் கொண்டிருந்த சி.எஸ்.ஐ. சபை ஆராதனை வெறுப்பாக மாறினது எப்படியும் வேதத்தின்படி நடக்கிற. ஆராதிக்கிற மக்களை எங்களுக்கு காண்பிக்க வேண்டும் என்று நாங்கள் குடும்பமாய் ஜெபித்து வந்தோம். 1968–ம் ஆண்டு ஒரு தரிசனத்தில் தேவன் தலைமையைக் காண்பித்தார். அன்றிலிருந்து புதிய எருசலேமுக்கு ஆராதிக்கப் போய் வந்தோம். பணக் கஷ்டம் இருந்தும் மாதம் ஒரு முறை மட்டும் புதிய எருசலேம் சபைக்குப் போவோம். மற்ற நாட்களில் அருகாமையிலுள்ள ஏதாவவொரு ஆராதனைக்குப் போகலாம் என்று மனைவியிடம் கூறினேன். அவளோ அப்படியல்ல, போனால் புதிய எருசலேம் ஆராதனைக்கே போக வேண்டும் வேறெங்கும் போகக்கூடாது என்று கேட்டுக் கொண்டாள்.

எனக்கு கொஞ்சம் கடன் இருந்தது. மாதம் 350/–ரூ. சம்பளம் கிடைக்கும். அதில் 300 ரூபாயை வட்டிக்காக எடுத்துவிட்டு வெறும் 50 ரூபாய் மட்டுமே வீட்டுக்கு கொண்டு வருவேன். மாதம் முழுவதற்கும் இந்த 50 ரூபாயைக் கொண்டே வீட்டு காரியங்களை சமாளிப்பாள். இரண்டு பிள்ளைகளும் உண்டு.

இவ்வளவுதான் உங்களுக்கு சம்பளமா? என்று ஒரு நாளும் கேட்டதில்லை. எல்லோரும் சம்பளத்தன்றைக்கு தின்பண்டங்கள், பழங்கள், வாங்கி வருகிறார்களே நீங்கள் ஒரு நாளும் அப்படி வாங்கி வருகிறதில்லையே என்ற கேட்டால், நானோ கடன்காரனாய் இருக்கிறேன் என்பது அவளுக்குத் தெரியாது. நான் வெளியிலிருந்து வரும்போதெல்லாம் பண்டங்கள் வாங்கி வந்து பழக்கினால், என்றாவது வாங்காமல் வந்தால் அன்றைக்கு பிள்ளைகள் துக்கப்படும். ஆகையால் உன்னிடத்தில் காசு மீதி வரும்பொழுது வாங்கி கொடுத்துக் கொள் என்று கூறினேன். நான் கொஞ்சம் பணம் சம்பாதிக்க வேண்டும் என்று விரும்பி சிட்பண்ட் ஒன்று நடத்தினேன். அதோடு மில்லிலுள்ள எல்லாத் தொழிலாளர்களையும், அதிகாரிகளையும் சேத்ந்து பொருளாதார சந்தா ஒன்றும் நடத்தி

வந்தேன். இதில் மீதமாகும் பணமெல்லாம் என்னுடைய பெயரிலேயே வங்கியில் போட்டு வந்தேன். அந்தப் பணத்தைக் கொண்டு எல்லா தொழிலாளர்களுக்கும் ஆளுக்கொரு வீடு கட்ட வேண்டும் என்ற தீர்மானத்தோடு செயல்பட்டு வந்தோம். இந்நிலையில் தான் நாங்கள் புதிய எருசலேம் சபைக்குள் வந்தோம். எனக்கு பரிசுத்த ஆவியின் அபிஷேகம் கிடைக்கவில்லை. ஆண்டவரே நான் என்ன பாவம் செய்தாலும், வெளிப்படுத்தி தாருங்கள் அறிக்கை செய்துவிட்டு விடுகிறேன் என்று நான் ஜெபித்துக் கொண்டிருந்த பொழுது பண ஆசை எல்லா தீமைக்கும் வேர் என்பதை கர்த்தர் உணர்த்தினார். எனக்கு உலக ஆசீர்வாதம் வேண்டியதில்லை என் தேவனுடைய ஆசீர்வாதம் வேண்டும் என்று எண்ணி என்னுடைய சீட்டு பண்டை முதலாவது விட்டேன். இரண்டாவது பொருளாதார சந்தாவிலிருந்து என் வீட்டுக்காக (ஊருக்கு) கொஞ்சம் கொஞ்சம் பணம் எடுத்து அனுப்பினதில் 3000/—ரூ. நான் அந்த சொசைட்டியில் கட்ட வேண்டியிருக்கிறது.

தொடரும்